## தென்காசி மாணவன் தன் சாதனையை கழகத் தலைவருக்கு சமர்ப்பித்து பெருமிதம்:

# இன்னும் பெரிய உயரங்களை அடைய வாழ்த்துகள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ‘ட்விட்டர்’ பதிவில் பாராட்டு!



சென்னை, மே 18 –

தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த முத்துக்குமார் என்ற மாணவர் சுவீடனில் உலகின் தலைசிறந்த 100 பல்கலைக்கழகங்களில் ஒன்றான KTH பல்கலைக்கழகத்தில் பயின்று M.S. பட்டம் பெற்றதை உணர்வும், பெருமிதமும், பொங்கிட அரசுப் பள்ளியில் பயின்று தான் பெற்ற வெற்றியை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன் எனப் பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார்.

அவரது வெற்றிக்கு வாழ்த்துக் கூறிய கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாணவர் முத்துக்குமார் இன்னும் பெரிய உயரங்களை அடைந்து புகழ்பெற வாழ்த்துவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது:-

**எனக்குச் சமர்ப்பிக்கிறேன்னு சொல்றதை விட, உங்க பெற்றோருக்குச் சமர்ப்பிக்கிறது தான் சரியா இருக்கும்.**

**உங்களை மாதிரி படிச்சு முன்னேற விரும்புற இளைஞர்களுக்கு நீங்க ஒரு guideஆ இருந்து வழிகாட்டுனீங்கனா அதுதான் எனக்கு மகிழ்ச்சி.**

**நீங்க இன்னும் பெரிய உயரங்களை அடையவும் புகழைப் பெறவும் வாழ்த்துகள் தம்பி.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின்அவர்கள்குறிப்பிட்டுள்ளார்.

*தென்காசி மாணவர் முத்துக்குமார் தான் அடைந்த வெற்றியை கழகத் தலைவர் அவர்களுக்கு சமர்ப்பிப் பதாக கூறியிருப்பதாவது:-*



**எங்கோ தென்காசி மாவட்டத்தின் ஒரு அரசு உதவி பெறும் பள்ளியில் பயின்ற நான். இன்று சுவீடனில் உலகின் தலைசிறந்த 100 பல்கலைக்கழகங்களுள் ஒன்றான KTHல் MS பட்டம் பெற்றிருக்கிறேன். இந்தப் பட்டத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.**

இவ்வாறு மாணவர் முத்துக்குமார் தெரிவித்துள்ளார்.

## அராஜகத்தை முதல் நாளிலேயே தொடங்கிய அமைச்சர் நிர்மல் குமார்!

### திருப்பரங்குன்றம் கோவிலில் விதியை மீறி நுழைந்தார்!

*மதுரை, மே 18 -*

*அரசு பணிகளில் ஜோதிடர் நியமனம், அறநிலையத்துறை செயலாளர் பொறுப்புக்கு பார்ப்பன பெண் என தொடர்ந்து சர்ச்சையை சந்தித்து வரும் நிர்வாகத் திறனற்ற த.வெ.க. அரசு மற்றும் அதன் பொறுப் பற்ற அமைச்சர்களின் செயல்பாடு அவர்களின் அராஜகம் நாள்தோறும் வெட்ட வெளிச்சமாகி வருகிறது.*

*அதிலும் மதுரையில் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி திருக் கோவிலில் தான் பதவி ஏற்று மதுரைக்கு வந்த முதல் நாளில் அமைச்சர் சி டி ஆர் நிர்மல் குமார் நடந்து கொண்ட விதம் அனைவரையும் அதிர்ச்சி அடைய வைத் துள்ளது.*

*சென்னையிலிருந்து மதுரை வந்த அமைச்சர் நிர்மல் குமார் திருப்பரங்குன்றம் தொகுதியில் பல்வேறு நிகழ்ச்சி களில் பங்கேற்றார். அவர் மதியம் 12:55 மணிக்கு சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தரிசனம் செய்ய வந்தார். கோயில் முன் கட்சியினர் அவரை வரவேற்றனர்.*

*கோயிலுக்குள் சென்ற அமைச்சருக்கு கோயில் சார்பில் பூரண கும்ப மரியாதை வழங்கப்பட்டது. துணை கமிஷனர் ஞானசேகரன், அறங்காவலர்கள் சண்முகசுந்தரம், ராமையா, கண்காணிப்பாளர் சத்தியசீலன் வரவேற்றனர். பின் அமைச்சர், ஆதரவாளர்கள் 50க்கும் மேற்பட்டோருடன் மூலஸ் தானம் சென்று தரி சனம் செய்து திரும்பி னார்.*

*கோயிலில் வழக்கமாக மதியம் 12:30 மணிக்கு உச்சிகால பூஜை துவங்கும்.*

*மதியம் 12:45 மணிக்கு கோயில் ராஜ கோபுரத்தின் கீழ் உள்ள மண்டபத்தில் உள்ள பெரிய கதவுகள் சாத்தப் படும்.*

*பக்தர்கள் அனுமதிக் கப்பட மாட்டார்கள்.*

*விழா காலங்களில் மட்டும் மதியம் நடை*

*சாத்தப்படாமல் பக் தர்கள் அனுமதிக்கப் படுவர்.*

*நாட்களிலும், திரு மண நாட்களிலும் வழக் கம் போல் மதியம் 12:45 மணிக்கு மேல் பக்தர்கள் கோயிலுக்குள் அனும திக்கப்பட மாட்டார் கள். அதற்கு முன்பே கோயிலுக்குள் சென்ற பக்தர்கள் தரிசனம் முடித்து வெளியேறிய பின் நடைசாத்தப்படும்.*

*அமைச்சர் நிர்மல் குமார் மதியம் 1:00 மணியளவில் கோயிலுக் குள் சென்றார். மதியம் 1:06 மணிக்கு மூலஸ்தானத்தில் ஆதரவாளர்களுடன் தரிசனம் முடித்து மதியம் 1:15 வெளியில் வந்தார். அதன் பின்பே கோயில் நடை சாத்தப் பட்டது.*

*வழக்கமாக பக்தர்கள் மூலஸ்தானத்தில் தரிசனம் முடித்து மடப் பள்ளி மண்டபம், சஷ்டி மண்டபம் வழியாக வெளியில் அனுப்பப்படுவர். அமைச்சருக்காக பெரிய நிலை கதவு திறக் கப்பட்டு முன் பக்க வாசல் வழியாக வெளியே அனுப்பப்பட் டார்.*

*அமைச்சர் மூலஸ்தானத்தில் தரிசனம் செய்த வீடியோ சமூக வலைதளங்களிலும் வைரலாக பரவியது. பக்தர்கள் கடும் அதிருப்திக்குள்ளாகினர். மாற்றம் என்று கருதி வாக்களித்த மக்களுக்கு ஏமாற்றம் மட்டுமல்ல இனி இது போன்ற விதிமீறல்கள் தான் பரிசா என பக்தர்களின் புலம்பல் கேட்டது.*

## ஈரோடு தெற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி அறிக்கை!



*ஈரோடு, மே 18 -*

*ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும் , முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி அறிக்கை வருமாறு:*

*ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டமானது மாவட்ட கழக அவைத் தலைவர் கே.குமார் முருகேஷ் தலைமையில் இன்று (18.5.2026 - திங் கட்கிழமை) மாலை 4 மணியளவில் ஈரோடு மணல்மேடு வீதியில் உள்ள மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், அண்ணா அரங்கத்தில் நடைபெற உள்ளது.*

*எனவே கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், துணை அமைப்புகளின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள்: கழக ஆக்க பணிகள்*

*இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.*

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் - சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக் குழு வருகை!

### மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி அறிக்கை!



*புதுக்கோட்டை, மே. 18 -*

*புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.ரகுபதி அறிக்கை வருமாறு:-*

*கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 14.05.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்ற திமுக கழக செயலாளர்கள் கூட்டத்தில் அறிவித்ததற்கிணங்க நடந்து முடிந்த சட்ட மன்ற தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வு செய்வதற்காக 36 பேர் கொண்ட குழு அமைக்கப் பட்டுள்ளது. மேற்கண்ட குழுவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திற்கு ஜோயல் அவர்களும், எ.வ.வே.கம்பன் அவர்களும் நியமிக்கபட்டு உள்ளனர். கிழே பட்டியலில் கண்டுள்ளபடி கள ஆய்வு செய்ய உள்ளதால் புதுக் கோட்டை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட, தொகுதி பார்வையாளர், வேட்பாளர், தொகுதிக்கு உட்பட்ட செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளை சேர்ந்த மாவட்ட நிர்வாகிகள், கிளை செயலாளர்கள், வார்டு செயலாளர்கள் மற்றும் கழகத்தின் மூத்த நிர்வாகிகள் கள ஆய்வில் கலந்து கொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*திருமயம் தொகுதி 18.05.2026*

*காலை 10.00 மணி ஏ. பி. எஸ் மஹால் கடியாப்பட்டி,*

*ஆலங்குடி தொகுதி 19.05.2026*

*காலை 9.00 மணி ஆர். கே மகால் ஆலங்குடி.*

*அறந்தாங்கி தொகுதி 20.05.2026*

*காலை 9:00 சந்தோஷ் மஹால் அறந்தாங்கி*

*இவ்வாறு எஸ்.ரகுபதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.செயற்குழு கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*மயிலாடுதுறை, மே. 18 -*

*மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் விஜய் மஹாலில் நாளை 19.5.2026 செவ்வாய்கிழமை மாலை 4.00 மணிக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ஜி. சினிவாசன் தலைமையில் நடைபெறுகிறது கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள்*

*1.ஜுன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா குறித்து*

*2. கழகத் தலைவர் தளபதி தலைமையில் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தின் தகவல்கள்*

*3. 2026 சட்ட மன்ற தேர்தலில் பணியாற்றியவர்களுக்கு நன்றி தெரிவித்தல்*

*4. கழக ஆக்கப்பணிகள்*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் நிவேதா முருகன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



## தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் முனைவர் பெ.பழனியப்பன் அறிக்கை!

*தருமபுரி, மே 18 -*

*தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை நடைபெறுகிறது என்று மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பெ.பழனியப்பன் அறிக்கையில் தெரிவித் துள்ளார்.*

*இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:*

*கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, நாளை ( 19.05.2026 - செவ்வாய்கிழமை) காலை 10.30 மணியளவில் காரிமங்கலம், மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்ட கழக அவைத்தலைவர் கே.மனோகரன், தலைமையில் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் இக்கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*



*பொருள்:*

*1. வருகின்ற ஜுன் 3ம் தேதி அன்று முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா குறித்து.*

*2. தருமபுரி மேற்கு மாவட்டத்திற்கு சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து களப்பணி ஆய்வுக்குழு வருகை சம்பந்தமாக.*

*3. கழக ஆக்கப் பணிகள் குறித்து.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித் துள்ளார்.*

## திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக

# சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக் குழுவினர் நேரில் ஆய்வு!

### மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் அறிவிப்பு!



திருப்பூர், மே 18 –

திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் உள்ள 2 சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக, சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக, தலைமைக் கழகத்தால் அனுப்பப்பட்டுள்ள கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி, கழக சட்டத்துறை துணைச் செயலாளர் என்.மருது கணேஷ் ஆகியோர் அடங்கிய கள ஆய்வுக் குழுவினர். நம்முடைய திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதி வாரியாக அவிநாசி சட்டமன்ற தொகுதிக்கு அவிநாசி பைபாஸ் சாலை, மங்கலம் சாலை ரவுண்டானா, கந்தவேல் மஹால், ஹோட்டல் அன்னமை அருகில்,

திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு வேலம்பாளையம், பார்ச்சூனர் ஹோட்டல் அருகில் அமைந்துள்ள திருப்பூர் வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில்

கீழ்கண்ட விவரப்படி கீழ் காணும் நாட்களில் நேரில் வருகை தந்து கழக நிர்வாகிகள் அனைவரையும் தனித்தனியாக சந்தித்து பேசி சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்ய உள்ளனர்.

18.05.2026 காலை 9.30 மணி மற்றும் மாலை 4.00 மணி அவிநாசி சட்டமன்ற தொகுதி

19.05.2026 காலை 9.30 மணி மற்றும் மாலை 4.00 மணி திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி

காலையில் அந்தந்த சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட, தாய்கழக நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் சட்ட மன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், 2026–ல் போட்டியிட்ட கழக வேட்பாளர்கள், தேர்தல் பார்வையாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள், வார்டு செயலாளர்கள் ஆகியோர் பங்கேற்க வேண்டும். குறிப்பாக தற்பொழுது பொறுப்பில் இல்லாத முன்னாள் மூத்த நிர்வாகிகளையும் கூட்டத்திற்கு கண்டிப்பாக அழைக்க வேண்டும்.

மாலை 4.00 மணிக்கு சார்பு அணிகளின் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி நிர்வாகிகள் பங்கேற்க வேண்டும்.

கூட்டத்தில் கைபேசி கட்டாயம் அனுமதி இல்லை.

கூட்டத்தில் தங்களது கருத்துக்களை கூற வரும் நிர்வாகிகள் மனுவாகவும் தரலாம், அதே நேரத்தில் அந்த கருத்துக்களை சுருக்கமாக நேரிலும் தெரிவிக்கலாம்.

எனவே சட்டமன்றத் தொகுதி வாரியாக நடைபெற உள்ள இக்கள ஆய்வின் போது அந்தந்த தொகுதியில் அடங்கி உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழகச் செயலாளர்கள் அனைவரும், கழக நிர்வாகிகள் அனைவருக்கும் முறையாக தகவல் தந்து அவர்கள் அனைவரையும் இருவேளைகளிலும் நடைபெறும் இக்கள ஆய்வு நிகழ்ச்சியில் பங்கேற்கச் செய்யும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.



கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கோட்டைமேடு பகுதியில் தொகுதி மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். இதில் கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை. செந்தமிழ் செல்வன், துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், பகுதி கழக பொறுப்பாளர் பக்ருதீன் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.